கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம், புவியியற்றுறை
முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு பொதுக்
கலைமாணித் தேர்வு 2015/2016 (Oct./Nov. 2018)

| GY 1112 | புவியியலின் அடிப்படைகள்<br>Fundamentals of Geography | நேரம்: 02 மணித்தியாலங்கள் |
|---|---|---|

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தேர்ந்தெடுத்து எல்லாமாக **நான்கு (04)** வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

## பகுதி – I

1) அ. ஒளி ஆண்டு எனப்படுவது யாது?
(05 புள்ளிகள்)

ஆ. ஞாயிற்றுத் தொகுதியில் அமைந்த கோள்களின் ஒழுங்கைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றும் தனது அச்சில் எத்தனை பாகை சாய்வில் தன்னைத்தானே சுற்றுகின்றது எனக் குறிப்பிடுக.
(08 புள்ளிகள்)

இ. ஏனைய கோள்களோடு ஒப்பிடுகையில் புவியின் தனித்துவமான இயல்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.
(12 புள்ளிகள்)

2) அ. வளிமண்டலம் எனப்படுவது யாது?
(05 புள்ளிகள்)

ஆ. வளிமண்டலத்தின் படைகளை வரிப்படம் ஒன்றின் மூலம் எடுத்துக்காட்டி, வளிமண்டல வாயுக்களின் செறிவினை பட்டியல் படுத்துக.
(08 புள்ளிகள்)

இ. பூகோள காலநிலை மாற்றத்தின் விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு, விளக்குக.
(12 புள்ளிகள்)

3) அ. மானிடப் புவியியலின் உள்ளடக்கங்கள் எவையெனக் குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

ஆ. மனிதனுக்கும் சூழலுக்குமுள்ள இடைத்தொடர்புகள் குறித்து மூன்று முனைப்பான பண்புகளின் அடிப்படையில் விளக்குக.
(10 புள்ளிகள்)

இ. ஆரம்ப கால மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளில் நாடோடி மந்தை மேய்த்தல் மற்றும் பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை போன்றவை கொண்டிருந்த முக்கியத்துவத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

4) உலகில் வேறுபட்ட பருவங்களின் தோற்றத்துக்குக் காரணமான புவி - சூரியன் ஆகிய இரண்டுக்குமிடையிலான தொடர்பினை விபரிக்குக.

(25 புள்ளிகள்)

5) "நவீன புவியியலானது இன்று பல்வேறு தொழில் நுட்பக் கட்டமைப்புக்களை உள்வாங்கி அனைவருக்கும் பொதுவான ஒரு கற்கை நெறியாக வளர்ச்சியடைந்து வருகின்றது" இக்கூற்றினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக. பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களைக் கையாண்டு விடையளிக்குக.

அ. புவியியின் உட்பாகக் கட்டமைப்பு.

ஆ. செறிவான பிழைப்பூதியப் பயிர்ச் செய்கை

இ. குடித்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் பிரச்சினைகள்.

(2x12.5 = 25 புள்ளிகள்)